5 முறை முதல்வராக இருந்து - மகத்தான சாதனைகள் பல படைத்து

மக்களின் வலியைப் போக்கும் அருமருந்தாக விளங்கியவர் கலைஞர்!

அரண்மனைப் பட்டியில் 1900 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஆக. 1- சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை, கல்லல் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாளை முன்னிட்டு 1900 பயனாளிக ளுக்கு அரண்மனை பட்டியில் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளர்கள் குன்றக்குடி ஆர். சுப்பிரமணியன் கே .ஆர் .ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ் .ரவி ஆகியோர் தலைமையில் ஒன்றிய அவைத் தலைவர் அழகப்பன், ஒன்றிய துணைச் செயலாளர் ராஜா ,கிளைச் செயலாளர் அருணாச்சலம், நிர்வாகிகள் பொ. சக்திவேல், கா.ராமு வேளார் அ. சின்னப்பன், ஊராட்சி மன்ற தலைவர் அரு. சிவகாமி ஆச்சி கௌ. செல்லத்துரை ,கரு.முருகேசன், கரு.ராமகிருஷ்ணன், கா.ஜமால் முகதீன், ஆர். எம். கே .பாரதி, பொதுக்குழு உறுப்பினர் கரு. அசோகன், கல்லல் கிழக்கு ஒன்றிய செயலாளர்நா.நெடுஞ்செழியன்,ஐ. சார்லஸ், மா.முத்தழகு, ராதா செல்வம், நாச்சியப்பன், பழனியப்பன், ரவிச்சந்திரன் , ஏ டி .எஸ். சுப்பையா, ஆறுமுகம் ,கே. சுப்பிரமணியன், வெள்ளைச்சாமி, மனச்சை பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் குன்றக்குடி எஸ். குமார் வரவேற்புப் பேசினார். நிகழ்ச்சியில் 1900 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. தலைவர் கலைஞர் நூற்றாண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பொதுக்கூட்டம் பலருடைய முயற்சியினால், உழைப்பினால், கூட்டு முயற்சியினால் இத்தகைய நிகழ்ச்சி நடைபெறுகின்றது .சிவகங்கை மாவட்டம் முழுவதும் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாளை முன்னிட்டு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய ஏராளமான கழகத் தொண்டர்கள் உழைப்பதால் இந்த கழகத்தை யாராலும் அழிக்க முடியாது. இயக்கத்திற்காக தங்களது உயிரையும் வாழ்க்கையையும் அர்ப்பணித்து வருகிறார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ் மக்களுக்காக வாழ்ந்து மறைந்தவர். ஒவ்வொருவர் இதயத்திலும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார். பெரியாரின் கொள்கைகளை பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றினார். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்கு பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் கழகத் தலைவராக கழகத்தின் கொள்கைகள் மாறாமல் இயக்கத்தினை வலிமையுடன் 50 ஆண்டுகள் வழி நடத்திய பெருமை தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. தமிழகத்தில் ஐந்து முறை முதல்வராக இருந்த பொழுது மகத்தான சாதனைகளுக்கு உரியவரும் கலைஞர் தான். அத்தகைய தலைவரின் பெயரைச் சொல்லி மக்களுக்கு ஏதாவது வழங்கிட வேண்டுமென்று எண்ணத்தில் இத்தகைய நலத்திட்ட உதவிகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. தனது 14 வயதில் திருவாரூரில் கொடியினை ஏந்திய தலைவர் கலைஞர் அவர்கள் 94 வயது வரை தமிழர்கள் முன்னேற்றத் திற்காக தன்னை அர்ப்பணித்தவர். தமிழினத்திற்காகவும் ,தமிழ்மொழிக்காகவும் வாழ்ந்து மறைந்தவர். இன்றுவரை ஒவ்வொருவரின் இதயத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். .அத்தகைய தலைவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது மிகவும் பொருத்தமான ஒன்றாகும் . தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தலில் 13. முறை போட்டியிட்டு தோல்வி காணாதவர். தம்மை எதிர்த்து போட்டியிட்ட அனைவரையும் தோல்வியடைய செய்து தேர்தலில் வெற்றிபெற்றார். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, ஜெயலலிதா , ஆகியோர் வெற்றி வாய்ப்பை இழந்தார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற தேர்தலில் எத்தகைய தோல்வியையும் பெறவில்லை. ஐந்து முறை முதல்வராக இருந்த பொழுது அவர் தீட்டிய திட்டங்களால் இன்று தமிழகம் பீடு நடை போட்டு முன்னேறிக் கொண்டிருக்கின்றது . பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தை அரசியல் இயக்கமாக உருவாக்கவில்லை. சமூக சீர்திருத்த இயக்கமாக உருவாக்கினார். தேர்தலில் போட்டியிடலாமா என்று கட்சியினரிடம் வாக்கு கேட்டார். 1957ல் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு மக்களுக்கு பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் முதன் முதலில் 15 சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு சென்றார்கள் .தொடர்ந்து 1962ல் 50 சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றார்கள். 1967 தேர்தலில் மிகப்பெரிய பெரும்பான்மையுடன் கழகம் ஆட்சி அமைத்தது. அந்த நேரத்தில் 1969 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மை விட்டு மறைந்தார்கள். பேரறிஞர் அண்ணா மறைந்து விட்டதால் கழகம் அழிந்து விடும் என்று சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அத்தகைய சூழ்நிலையில் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமை பொறுப்பேற்று 50 ஆண்டு காலம் கழகத்தினை கொள்கை மாறாமலும் கட்டுப்பாட்டுடன் நடத்தி வந்தார். அவரது வழியில் இன்று தமிழக முதல்வர் தளபதி அவர்கள் கொள்கை மாறாமல் கட்டுப்பாட்டுடன் கழகத்தை நடத்தி வருகின்றார். ஆட்சியையும் நடத்தி வருகின்றார். இந்தியாவி லேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் பல்வேறு அரிய திட்டங்களை சிந்தித்து செயல்பட்டு அதை நிறைவேற்றிய வர் தலைவர் கலைஞர். அவர் கொண்டு வந்த திட்டங்கள் அனைத்துமே புரட்சிகரமான திட்டங்களாகும் . கலைஞரின் திட்டத்தை பல மாநிலங்கள் பின்பற்றி நிறைவேற்றி கொண்டிருக் கிறது.நாடு சுதந்திரம் அடைந்து 75ஆண்டுக ளுக்கு மேலாகியும் வட மாநிலங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. சாலை வசதி, போக்குவரத்து வசதிகள் முழுமையாக இல்லை, ஆனால் நமது தமிழகத்தில் அனைத்து வசதிகளும் படிப்படியாக அடைந்து முன்னேறிய மாநிலமாக திகழ்கிறது .ஒரு நாடு வளர்ச்சி பெற கல்வி முக்கியமாகும். அத்தகைய கல்விப் புரட்சியை கலைஞர் உருவாக்கிய தால் தமிழகம் முன்னேறியது. பிரதமர் வீடு கட்டும் திட்டத்திற்கு 32 சதவீதம் நிதியை ஒன்றிய அரசும் மாநில அரசு 68சதவிகிதமும் தருகிறது . ஆனால் ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கு அவர்கள் பெயரை வைத்துக் கொண்டுள்ளது கூட்டுறவு துறை என்பது பரந்து விரிந்த துறையாகும். இத்துறையில் 7500 சங்கங்கள் உள்ளது .ஒரு லட்சம் கோடி வரவு செலவு நடைபெற்றது. கடந்த 2022-2023ஆம் ஆண்டு 60 ஆயிரம் கோடிவரவுசெலவு நடைபெற் றது. .அது ரூபாய் 84,000 கோடியாக உயர்ந்தது .தற்பொழுது ஒரு லட்சம் கோடி வரவுசெலவு வழங்கப்பட வேண்டும் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் .அந்த இலக்கினை கூடுதலாக அடைவோம்.அத்தகைய இலக்கினை சென்றடையும் வகையில் கூட்டுறவுத் துறை சிறப்பாக செயல்படும். கலைஞர் ஒரு சகாப்தம் .நீட் தேர்வு தமிழகத்திற்கு வேண்டிய தில்லை என்று உறுதியாக சொன்னவர் கலைஞர்.அதே வழியில் ஜெயலலிதா அவர்களும் செயல்பட்டு வந்தார் . ஆனால் பழனிச்சாமி முதல்வரானதும் நீட் தேர்வை கொண்டு வந்தார் .

இதனால் 25க்கும் மேற்பட்டமாணவவர்கள் பலியானார்கள். இன்று தமிழகம் பின்பற்றிய இக்கொள்கை பல்வேறு மாநிலங்கள் நீட் தேவையில்லை என்று தீர்மானம் நிறைவேற்றி வருகிறார்கள். எனவே எத்தகைய நல்ல காரியங்கள் நடைபெற்றாலும் அது தமிழகத்தில் தான் தொடங்கப் படுகிறது . இன்று இந்தியா கூட்டணி வலிமையாக உருவானதற்கான காரணம் முதல்வர் தளபதி அவர்களின். பங்கு முக்கியமானதாகும் நம்முடைய தளபதி அவர்களின் முயற்சியினால் இந்தியா கூட்டணி வலுவாக அமைந்துள்ளது. இதனால் முதல்வர் தளபதி அவர்கள் பிரதமர் மோடிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி வருகிறார். மற்ற மாநிலங்களில் நாடாளுமன்ற தேர்தலில் ஒரு சில இடங்களில் பா.ஜ.க .வெற்றி பெற்றது . ஆனால் தமிழகத்தில் பா.ஜ.கவால் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. மதச்சார்பற்ற தன்மையின் தலைவராக முதல்வர் தளபதி அவர்கள் விளங்கி வருகிறார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்து மக்களின் வலியை உணர்ந்தவர். எனவே அனைத்து மக்களின் வலியைப் போக்கும் மருந்தாக தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்தினார் .அதனால் அனைத்து தரப்பு மக்களும் பயன் அடைந்துள்ளார் கள் . தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு தொலை நோக்கு திட்டங்களை செயல்படுத்தினார் . ஒரு மாநில கட்சியின் தலைவராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் இந்திய அரசியலை நிர்ணயிப்பதில் முக்கிய பங்காற்றினார். தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் தளபதி அவர்களும் செயல்பட்டு வருகிறார். எனவே பொது மக்கள் தொடர்ந்து முதல்வர் தளபதி அவர்களுக்கு தங்களது பேராதரவினை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் திருமதி மணிமேகலை, மகளிரணி காஞ்சனா,

ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் ஆனந்தன், வி .சி. டி .ராஜு, மாவட்ட பொறியாளரணி அமைப்பாளர் முருகப்பன், முன்னாள் ஊராட்சி தலைவர்வேலுச் சாமிஅம்பலம், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர்கள் சில்வஸ்டார் சேவியர், நிர்வாகிகள் ஈஸ்வரன், கொத்தமங்கலம் குமார், செந்தில், லட்சுமணன், சங்கர்மணிமேகலை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முருகப்பன், ஒன்றிய கவுன்சிலர்கள் வி.மருது பாண்டியன், ஏ. எஸ். கே. ஆரோக்கியசாமி, மாவட்ட இலக்கிய அணி தலைவர் புலிக்குத்தி சீனிவாசன்,மும்பை முன்னாள் மாநில இளைஞரணி அமைப்பாளர் மும்பை ஜேசுராஜ், பனங்குடி ஜோசப், ஆர்.பாண்டிய ராஜன், க.ராமராஜன், மனோஜ் குமார், அ.மணிமுத்து பி.ராமகிருஷ்ணன் , சாந்தி, சித்ரா அந்தரி, பெருமாள் ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் ஊராட்சிக் கழக நிர்வாகிகள் அரு.தியாக ராஜன், சாகுல் ஹமீது அழ.செல்வம், ஊராட்சி மன்ற தலைவர் மலர் மாணிக்கம் ரேகா, வள்ளியம்மை ஆச்சி, பி.இந்திராணி, பி.அ.ஆர்.கருப்பையா , காசி, எஸ்.முருகேசன் ஜி.பஞ்சவர்ணம் கே. கண்ணன், அண்ணாதுரை, பி.ஆர்.பாண்டி, பாண்டி செல்வம் செ.ராயப்பன், அ.தனிஸ்லாஸ், கு.உபகாரகு சிந்தா, லூர்து மேரி, சவரி அம்மாள், சி.வைரவன். சே. வீரப்பன், ராம. கணேசன் செ.பழனியப்பன், கரு,பாண்டியன்,

இராம. கணேஷ்குமார், கே.ஆர். ராமச்சந்திரன், எம். ஆர். முத்து, சி. ராமு கே. ஆர். முருகேசன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், அயலக அணி சன் சீமான் சுப்பையா, தகவல் தொழில் நுட்ப அணிதுணை அமைப்பாளர் காளிமுத்து, வர்த்தக அணி ருக்மாசரவணன், உட்பட சுற்றுப்புற கிராம மக்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஒன்றிய செயலாளர்கள் குன்றக்குடி சுப்பிரமணியன், கே. ஆர். ஆனந்த்,பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர்கே. எஸ். ரவி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி கல்லல் சாக்கோட்டை மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் அரண்மணை பட்டியில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவினை முன்னிட்டு 1900பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கூட்டுறவுத்துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவிஒன்றிய செயலாளர்கள் குன்றக்குடி சுப்பிரமணியன், கே.எஸ்.ஆனந்த், நா.நெடுஞ்செழியன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஓராண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 9160 பேர் - துணை சுகாதார நிலையங்களில் 570 பேர் பயன்!

'இதயம் காப்போம்!' - இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம்!

விருதுநகர் நிகழ்ச்சியில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!

விருதுநகர், ஆக.1- 'இதயம் காப்போம்' திட்டம் மூலம் ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்களில் 14 மாத்திரைகள் கொண்ட பெட்டகம் இருப்பு வைக்கப்பட்டு, மாரடைப்பு அறிகுறியுடன் வரும் நபர்களுக்கு முதற்கட்ட சிகிச்சைகள் வழங்கப்பட்டு, ஓராண்டில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 9,166 நபர்களும், துணை சுகாதார நிலையத்தில் 570 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

இதுபோன்ற திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

விருநகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்த தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் சிறந்த மருத்துவக் கட்டமைப்புகளை உருவாக்கி, அதன் மூலம் பொதுமக்களுக்கு தரமான மருத்துவச் சேவைகள் வழங்கும் நோக்கில் எண்ணற்ற திட்டங்களை உருவாக்கிச் செயலபடுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள வருவாய் மாவட்டங்களில் விருதுநகரில் நடைபெற்றுக் கொண்டிருக்க கூடிய மருத்துவ திட்டங்கள் போல் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அதிக அளவில் திட்டங்கள் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதன்படி, கன்னிசேரி புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பில் புற நோயாளிகள் பிரிவு கட்டடம், வச்சக்காரபட்டியில் ரூ.35 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலைய புதிய கட்டடம், அல்லம்பட்டியில் ரூ.35 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலையம் புதிய கட்டடம், விருதுநகரில் ரூ.45 இலட்சம் மதிப்பில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டடம், பந்தல்குடியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், ம.புதுப்பட்டியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மல்லியில் ரூ.20 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார மையம் புதிய கட்டடம், இடையன்குளத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார மைய கட்டடம், குன்னூர் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், இராஜபாளையம் பி.எஸ்.கே.மாலையாபுரத்தில் ரூ.36 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார மையம் புதிய கட்டடம் மற்றும் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் ரூ.243 இலட்சம் மதிப்பில் சிடி ஸ்கேன் மையம் என மொத்தம் ரூ.6.44 கோடி மதிப்பிலான புதிய மருத்துவ கட்டடங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமப்புற ங்களில், மலை கிராமங்கள் மற்றும் குக்கிரமங்களில் இருக்கும் மக்களுக்கு நாய்க்கடி, பாம்பு கடி என்றால், பெரிய நகரங்களில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளுக்கு சென்று தான் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். தற்போது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களில், நாய்க்கடி, பாம்புக்கடிக்கான மருந்துகள் உள்ளன. இதயம் காப்போம் திட்டம் மூலம் மாரடைப்பு அறிகுறியுடன் வரும் நோயாளிகளுக்கு முதற்கட்ட சிகிச்சை அள்க்கும் வகையில் 14 மாத்திரைகள் கொண்ட பெட்டகத்தை அனைத்து மருத்துவமனைகளிலும் வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது ஏராளமான உயிர்கள் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்டம் மூலம் தமிழகத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 9,166 நபர்களும், துணை சுகாதார நிலையத்தில் 570 நபர்களும் பயனடைந்துள்ளனர். இது போன்ற திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

விருதுநகர் மாவட்டத்தில், சாத்தூர் அரசு மருத்துவமனையில் ரூ.3.71 கோடி மதிப்பில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவும், அருப்புக்கோட்டை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.30 கோடி கூடுதல் கட்டடங்களும், இராஜபாளையம் அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்த ரூ.40 கோடி மதிப்பில் கட்டடங்களும், சிவகாசி அரசு மருத்துவமனையில் ரூ.32.54 கோடி மதிப்பில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டடமும் கட்டும் பணிகளும்,

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாயில்பட்டியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகும், இராஜபாளையம் மாடசாமி கோவில் தெருவில் ரூ.60 இலட்சம் மதிப்பில் நகர ஆரம்ப சுகாதார நிலைய கட்டடமும், ஜமீன் கொல்லன் கொண்டானில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகும், நரிக்குடியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகும், ம.ரெட்டியபட்டியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகும், பரளச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.1.20 கோடி மதிப்பில் கூடுதல் கட்டடமும், வீரசோழன் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.1.20 கோடி மதிப்பில் கூடுதல் கட்டடமும், ம.புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.1.20 கோடி மதிப்பில் புறநோயாளிகள் பிரிவு கட்டமும், மம்சாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.1.20 கோடி மதிப்பில் புறநோயாளிகள் பிரிவு கட்டமும், சாத்தூரில் ரூ.1.20 கோடி மதிப்பில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டடமும், நாலூர், பட்டம்புதூர், டி.செட்டிகுளம், தொப்பலாக்கரை, விருதுநகர், அருப்புக்கோட்டை, கரிசல்பட்டி, கீழகோடாங்கிபட்டி, கிருஷ்ணாபுரம், நல்லமுத்தன்பட்டி, பள்ளபட்டி, பெரியார் நகர், ஸ்டாண்டர்டு காலனி ஆகிய துணை சுகாதார நிலையங்கள் தலா ரூ.30 இலட்சம் மதிப்பிலும், எதிர்கோட்டை, கொங்கன்குளம் ஆகிய துணை சுகாதார நிலையங்கள் தலா ரூ.35 இலட்சம் மதிப்பிலும் என ஆக மொத்தம் ரூ.119.45 கோடி செலவில் 29 மருத்துவ கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு விருதுநகர் மாவட்டத்தில், ரூ.5.25 கோடி மதிப்பில் 23 துணை சுகாதார நிலைய கட்டடங்கள்,ரூ.4.75 கோடி மதிப்பில் 13 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வட்டார பொது சுகாதார அலகு, மருத்துவ அலுவலர் குடியிருப்பு, செவிலியர் குடியிருப்பு, புறநோயாளிகள் பிரிவு, பிரசவ பின் கவனிப்பு வார்டு மற்றும் தாய் சேய் நலக் கட்டடம், ரூ.6.89 கோடி மதிப்பில் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவு கட்டடம், ரூ.380.2 கோடி மதிப்பில் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி கட்டடம், மருத்துவமனை கட்டிடம், தீக்காய சிகிச்சை பிரிவு படுக்கை புண்சிகிச்சை பிரிவு, தீவிர நுரையீரல் சிகிச்சை பிரிவு ஆகிய வசதிகள் தொடங்கி வைக்கப்பட்டு பொது மக்கள் பயன் பெற்று வருகின்றனர். இந்த மாவட்டத்தில் மருத்துவ கட்டமைப்பு என்பது மிகப் பெரிய அளவில் உண்டாயிருக்கிறது. எனவே, பொதுமக்கள் ஒரு வளமான சமுதாயத்தை உருவாக்க, இந்த மருத்துவக் கட்டமைப்புகள் மூலம் வழங்கப்படும் சேவைகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
பூங்கா (ம) விளையாட்டுத்திடல்

அ.து.ந.க.எண்.அ3/678/2024 **இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (Tender)**

மேற்பார்வை பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

2024-25 ஆம் ஆண்டு மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு ரூ.5 கோடி மதிப்பீட்டில் 19 விளையாட்டுத் திடல்கள் மேம்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் பணிகள் மற்றும் ரூ.10 கோடி மதிப்பீட்டில் "EmpowHER" பெண்கள் உடற்பயிற்சிக்கூடம் மேம்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் பணிகள் (Two cover system) மின்னணு ஒப்பந்தப்புள்ளி (Tender)

பணியின் விவரம் குறைந்தது ரூ.158.70 லட்சம் அதிகபட்சம் ரூ.179 லட்சம் Including GST

முன்வைப்பு தொகை : பணியின் மதிப்பில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **14.08.2024 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **16.08.2024 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2694 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மேற்பார்வை பொறியாளர் (பூ(ம)வி)**

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என்.எம்.துரைசாமி
ஆகஸ்ட் 1 (2020)



தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு புழல் பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.

புழல் ஒன்றியச் செயலாளராகவும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட பொருளாளராகவும், அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நாரவாரிகுப்பம் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், மூன்று முறைமாதவரம் நகர்மன்ற உறுப்பினராகவும் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். நெல்,அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நெல்லை மாவட்டத்தில் அரசு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் தொடக்கப்பள்ளி மாணவ- மாணவியர்களுக்கு இணை சீருடை நெல்லை மாவட்டத்தில் 1185 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 65,053 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட உள்ளது.அதன்படி நெல்லை மாவட்டம் குறிச்சி மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் மூலம் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இணை சீருடைகளை பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் வழங்கினார்.நிகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் ராஜபிரியா மாவட்ட கல்வி அலுவலர்(பொ) அழகுராஜன் மேலப்பாளையம் மண்டல தலைவர் கதீஜா இக்லாம் பாசிலா, பகுதி செயலாளர் துபாய் சாகுல், மாமன்ற உறுப்பினர்கள் அமுதா சுந்தர்,கந்தன்,சபிஅமர்பாத், தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.